# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுச] யாழ்ப்பாணம்:- நந்தன வரு புரட்டாதி மீ கஉ செவ்வாய்க்கிழமை (16 Sept. 1952) [இல - சஙு]


எல்லார்க்குமில்லையென்னுதருள் செய்வார்

திருச்சிற்றம்பலம்,

நறைசேர்மலரைங்கணையானைநயனத்தீயாற்பொடிசெய்த
விறையாராவரெல்லார்க்குமில்லையென்னுதருள்செய்வார்
பறையார்முழவம்பாட்டோடுபயிலுந்தொண்டர்பயில்கடவூர்
பிறையார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

திருச்சிற்றம்பலம்.

# தூய அன்னை கிருஷ்ணபாய்

## தெய்விக வாழ்வுச் சிறப்பு

"கருங்குவளை மலர்விழியால் கருணைகாட்டி
கமலமுகத் தெழில்நகையால் சவலையோட்டி
அருங்கரத்தின் சேவையினால் அல்லல் நீக்கி
அழகொழுகுந் திருமொழியால் இன்பந்தேக்கி
உருகடியார் ஊழ்வினைதீர் பாதந்தாங்கி
ஒளிவீசும் மேனியெங்கும் ஞானமேந்தி
வருங்கிருஷ்ண பாயேஎம் ஜோதித்தாயே
வந்தனம்நின் பொன்னடிக்கே ஏற்றுக்கொள்ளே!"

மனித சமுதாயத்தின் அருமையும் பெருமையும் வாய்ந்த மலர்கள் சில உலகில் அவ்வப்போது தோன்றுகின்றன. உலகளாவிய அன்பு, தன்னலமற்ற சேவை, தம்மை முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்த வாழ்வு, இவையே அம்மலர்களின் இயல்பான நறுமணம். ஜகன்மாதா, பராசக்தி, குருதேவி, தூய அன்னை என்று பக்தர்களால் அழைக்கப்படும் ஸ்ரீ கிருஷ்ணபாயும் இத்தகைய மலர்களில் ஒருவராகத் திகழ்பவர்.

துளசிதாஸ், கபீர்தாஸ், ராமதாஸ், மீராபாய், சக்குபாய் முதலிய பக்தர்கள் தோன்றிய மகாராஷ்டிர தேசத்திலேயே தூய அன்னையாரும் சுபகிருது வருஷம (1903) புரட்டாதி மாசம் பூர நட்சத்திரமும் மகாளய அமாவாசையும் பொருந்திய புண்ணிய தினத்திலே அவதாரம் எடுத்தார்கள்.

தம்மை முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்து அவனின் இடையறா உணர்விலே வாழ்க்கையை நடத்துதல் ஒரு சில தனிப்பட்டவருக்குத்தான் ஏற்பட்டதல்ல வென்பதையும் மக்களெல்லோரும் அவ் வழியிற்றான் செல்லவேண்டுமென்பதையும் தனது வாழ்க்கையினாலேயே உலகிற்கு எடுத்துக்காட்டபோலும், அன்னையார் உரியகாலத்தில் இல்லறமேற்று இரு குழந்தைகட்குத் தாயானார். அவருக்கு இருபதாவது வயதாய் இருக்கும்போதே கணவனை இழக்க நேரிட்டது. தாமும் இறந்திருக்கலாகாதா என்ற எண்ணமும் எழுந்ததுண்டு. ஆனால் மகான்களின் சகவாசத்தினால், "மக்கட்பிறவி பரம்பொருளை அடைதற்கே" என்ற உறுதி ஏற்பட்டது. ஆகவே ஆத்மசாதனத்தில தீவிரமாக ஈடுபட்டார்.

சென்ற இருபத்திரண்டு ஆண்டுகளாக, தென்கன்னடம் ஆனந்தாச்சிரமத்தின் உயிராகவும், அதிஷ்டான தேவதையாகவுமிருந்து "அன்பு" என்னும் பண்பை உலகெல்லாம் அன்னையார் பரப்பி வருகிறார்கள் அன்பிற்கு அடைக்குந்தாழ் இல்லை. அது உலகளாவியது, எல்லாவற்றையும் தன்னுள்ளடக்கியது. "அகங்கார உணர்ச்சிகள் எரிந்த சாம்பரில் உலகளாவிய அன்பு தளிர்க்கிறது" என்று சுவாமி இராமதாஸர் அன்பு இன்னதென்று விளக்குகிறார்கள். இத்தகைய அன்பின் சொரூபமாகவே தூய அன்னையார் திகழ்கின்றார்கள். குழந்தைகளிருவர் மாத்திரம் 'அம்மா' என்று அழைப்பதற்கில்லாமல் உலகம் முழுவதும் 'தாயே'! என்று போற்றும் இடத்தில் அன்னையார் இன்று வீற்றிருக்கின்றார்கள். தூய அன்னையின் திருப்பாதம் என்றும் வாழ்க!

அரசியல் அலை

# சாராயம் சேகரிக்கும் கவலை

## இடம் ஆராய்கின்றதாம் அரசாங்கம்

அரிசிப் பஞ்சம் வந்தாலும் வரட்டும்; வாழ்க்கை வில்லங்கமானாலும் ஆகட்டும்; சாராயம் தாராளமாக உண்டாக்கப்பட வேண்டும், அதைச் சேகரித்து இந்து புத்த இஸ்லாம் கிறிஸ்தமத மக்கள்வாழ் இலங்கையருக்கு இலேசாக வழங்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் பெருங் கவலைபோலத் தோன்றுகிறது.

சாராயஞ் சேகரிக்க இடம் ஊரார்டம் உண்டு. காய் கனி கிழங்கு சோறு நீர் யோர் முதலியன சேகரிக்கப்படும் வயிற்றிலே கள் சாராயம் முதலிய மதப் பதார்த்தங்களைச் சேர்த்து வைப்பதற்கு அரசாங்கம் உதவிபுரிவதானால இந்நாட்டில் அரசியலுக்கு ஆத்மஞானம் இல்லைப்போலும்.

பரிந்து தேடுகிறார்கள் சேகரிக்கும் இடம். உற்பத்தியை அதிகரிக்க உபாயங்கள் நாடுகிறார்கள். ஒருபிடி சோறுமில்லாது வருபிணியால் வாடும் மக்களுக்கு உயிரையும் உடம்பையும் ஒன்றாய் வைத்திருக்க உபாயந்தேட நேரம்போதாது. சாராயஞ் சேகரிக்க இடமும வழிவகைகளும் நாட அவகாசம் உண்டா?

ஆனால் அரிசியில்லை ஏறிவிட்டதென்று ஆரவாரஞ் செய்யும பொதுசனமும் அரசியல்வாதிகளுந் சாராயம் வேண்டாம் அரிசிதான் வேண்டும் என்று நேர்மையாகச் சொன்னால் என்ன? இரண்டும வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் தானா அரசாங்கத்தைப் பலமாகக் கண்டிக்கிறார்கள். துணிந்து நின்று சாராயம் வடிக்காதீர்கள் என்று பிரதிநிதிகளும் சமூக சேவைத் தொண்டர்களும் ஏன் வாதாடக்கூடாது.

திருத்தொண்டர் திருநாள்

# இறை அபிமான அடியார்

## செருத்துணை நாயனார்

சோழதேசத்திலே மருகனாட்டிலே தஞ்சாவூரிலே வேளாண்மரபிலே திருவவதாரஞ்செய்து திருவாரூர்ப் பெருமானுக்குத் திருத்தொண்டுசெய்து வழிபட்டு வாழ்ந்தார் செருத்துணை நாயனார்.

அக்காட்களிலேகழற்சிங்கநாயனாருடைய மாதேவியார் பூமாலைகட்டும் மண்டபத்தின் பக்கத்திலே கிடந்த பூவொன்றையெடுத்து மோந்ததைக் கண்டு மண்டபத்திலிருந்த பூவையெடுத்து மோந்தாரென நினைத்து மனம் பொறாது அவருடைய மூக்கை அரிந்தார்.

இவ்வாறு பின்னரும் திருத்தொண்டு செய்து வாழ்ந்து கனகசபையின் கண்ணே திருநிருத்தஞ் செய்தருளுகின்ற நடராசப்பெருமானுடைய திருவடிநீழலையடைந்து பேரின்பப் பெருவாழ்வெய்தினார்.

அடுத்த திருத்தொண் டுலகறியச்
செய்த அடலே றனையவர்தாம்
தொடுத்த தாம மலரிதழி
முடியார்அடிமைத்தொண்டுகடல்
உடுத்த உலகில் நிகழச்செய்
துய்யச் செய்ய பொன்மன்றுள்
எடுத்த பாத நிழலடைந்தே
இறவா இன்பம் எய்தினர்.

## பாரதி விழா

'செந்தமிழ்ப்பற்றும் தெய்வீக வாழ்வும் பாரதி நமக்குத் தந்த பாக்கியங்களாம். அவற்றை ஏற்று அகிலம் எங்கும் பரப்புவதே அவர் வழி வந்த நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறாகும்" என முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் சென்ற 11-9-52 இல் வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத் தமிழ்மன்றச் சார்பில் நடந்த பாரதி விழாவிற் சொற்பொழிவாற்றும்போது குறிப்பிட்டார்கள். கல்லூரி முதலவர் திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் விழாவுக்குத் தலைமைவகித்தார்கள். மகாஜனக்கல்லூரி தமிழ் விரிவுரையாளர் புலவர் நா. சிவபாதசுந்தரன் தமது, பேச்சிடையே சூரிய சந்திரரைக் கண்ணன் பாட்டிலே பிரகாசிக்கச்செய்து, பாரதியின் உலக சமுதாயத்தைப் பாப்பாப் பாட்டிலே படம் பிடித்துக் காட்டினார்கள். நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது.

## வெள்ளையர் கடவுள்

கேப்டவுனில் (தென் ஆபிரிக்கா) வெள்ளையரல்லாத கிறிஸ்தவர்கள் செபம்பண்ணும்போது "எங்கள பிதாவே" என்பதற்குப் பதிலாய் "பிதாவே" என்று சொல்லும்படி ஒரு வெள்ளைப்பாதிரியார் கூறியிருக்கிறாராம். கடவுள், வெள்ளையர் கடவுளே என்பது பாதிரியாரது நிலையாயமாம். அங்கே இது ஒருபரபரப்பையுண்டாக்கியிருக்கின்றது.

சுயஸ்கால்வாய் எகிப்தியருடையதுதே என்கிறார் எகிப்திய பிரதம மந்திரி நகீப் அவர்கள்.

# மலபந்தமும் அதன் நீக்கமும்

## இறை பணியில் நிற்கவேண்டிய அவசியம்

ஆன்மாக்களாகிய நாம் இன்று அமைதியின்றி வாழ்கின்றோம். வெட்டுக்கிளி மனப்பான்மை கொண்டு மனம் தத்தளிக்கிறது. Grasshopper mentality) எந்த இடத்திலிருப்பினும், மற்றோரிடத்திலிருக்க மனம் நாடுகிறது. எவ்வளவு நிதி பெற்றிருந்தாலும், இன்னும் நிதிபெருக்க மனம் அவாவுகிறது. சுயநலம் மிதமிஞ்சி நிற்கிறது. பிராணன் உடலைவிட்டு நீங்கி ஒருமணி நேரங் கழித்துத்தான், சுயநலம் நம்மை விட்டகலுகிறது.

எங்குக் கோளாறு? அறிவிலா? இல்லை மனிதன் அறிவின் சிகரத்தை அடைந்துவிட்டான். அதன் பலனைக் கண்கூடாகக் காண்கிறோம். அனுபவித்தும் வருகிறோம். வெகு குறைந்த அளவில் வெகு அதிக சீவராசிகளை அழிக்கக் கற்றுக்கொண்டு இருக்கிறோம். அதுதான் நாகரிகம் என்றும் பறைசாற்றுகிறோம். நொடிப் பொழுதில் லக்ஷத்து எண்பதினாயிரம மைல் வேகத்தில் சென்று உலகத்தையே நிர்த்தூளி செய்யக்கூடிய அணுக்குண்டு கண்டுபிடித்துப் பெருமிதங்கொள்கிறோம். அன்று [illegible] புகட்டிய அறிவுரைகளை 2000 ஆண்டுகளுக்குப் பின் இன்று நன்சார அலைகள் உதவியால், சேமித்து நாம கேட்கக்கூடிய நிலைமையில் விஞ்ஞான வளர்ச்சி செய்துள்ளோம். நூற்று நாற்பதடுக்கு மாடியில் வாழும் வசதிபெற்றுள்ளோம். ஆனால் மன நிம்மதிமட்டும் இல்லை வறட்டறிவு வெகுவாய் வளர்ந்துவிட்டது. அன்பு சூனியப்படவே, சிவத்தைப் புறக்கணித்தோம்! 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்னும் உலோகாயதர்களாய் விளங்குகிறோம. வல்வினை, மலமாயைகளால் உயிர் கட்டுண்டு சுழலுகின்றது. மனமாகிய பாற்கடலில் தீய நல்ல எண்ணங்களால் கடையப்பட்டு, விஷமும் அமுதமும் வெளிப்பட்ட வண்ணமாயிருக்கின்றன. மனத்தில் எழும எண்ணங்களைக் காட்டும் கருவியொன்று நம் ஒவ்வொருவரிடமும் ஸ்தூலமாக இருப்பின, [illegible]

திருவெண்காட்டு இறைபணியாளர்
திரு. T. H. விவேகாநந்தம்பிள்ளை

கட்டுண்ட நிலைமை

இச்சண்டமாருதத்திலிருந்து தப்புவதற்குத் தக்க சாதனங்களைக் கடைப்பிடித்து, கட்டுண்ட நிலைமையிலிருந்து தப்பி விடுதலைபெற்று, சிவபதத்தையடைய வேண்டும. அச்சிவ பதத்தை நோக்கி உயிர் செய்யும் பிரயாணமே, அதன் உலக வாழ்க்கை. பிரணவத்தை வில்லாக வளைத்து, உயிரை அம்பாக வைத்து, பிரமமாகிய இலக்கை எய்தவேண்டும்.

விண்ணில் ஓர் காந்தம், குறிப்பின்றிப் பல்வேறு திசைகளில் உலவுகிறது. இழுக்கும் சக்தி பாயும் தூரத்தில் மணல் போன்ற எண்ணிக்கையில் அடங்காத இரும்புத் துளிகள் கிடக்கின்றன. விண்ணிலிருந்து பல திசைகளில் மண் திவலைகள் விழுந்தவண்ணமாயிருக்கின்றன. காந்த அசைவால் இரும்புத்துளிகள் இழுக்கப்படுகின்றன. விழும் மண் திவலைகளால் இரும்புத் துளிகள் மூடப்பட்டுக் காந்தத்தை அடைவதிலிருந்து தடை செய்யப்படுகின்றன. ஆயினும பல இரும்புத் தூள்கள இம் மண்மறைப்பையும தப்பி, காந்த சக்தியுடன் ஒன்றுகின்றன.

இந்த உருவகப்படுத்தப்பட்ட காந்தம் பதி. இரும்புத் தூள்கள் ஆன்மாக்களாகிய பசுக்கள். மண் திவலைகள் பாசம். இக்காட்சி, ஆன்மாக்கள கட்டுண்ட நிலைமையையும்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழக அர்தணர்வானவர் ஆனினம்
வீழகதண புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனுமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹு புரட்டாதிமூ
க உ செவ்வாய்க்கிழமை

## புகையிரதப் போக்கு வரத்து

=0=

வேகமே மயமான இக் காலத்தில் நாழிகைகளை வீணே போக்கு வரத்திற் கழிக்கவேண்டிய நிலையில் இலங்கை மக்கள் இருப்பது வெட்கத்துக்குரிய காரியம். இத் தீபகத்தின் நீளமோ 27 காதம் அகலமோ 14 காதம். கால் நடையாகச் சென்றாலும் காலந்தாழ்த்தாது காலியிருந்து காங்கேயன் துறைக்குப்போகலாம், மன்னாரிலிருந்து மட்டக்களப்புக்குச் செல்லலாம். ஆனாற் புகையிரத மார்க்கமாகச் செல்ல வேண்டுமேயானல் பொழுதோ போகாதவண்ணம் இருக்கின்றது.

இராமன் விகடன். அவன்றன் வாகனம் காதவழி மாதம் போனாற்றானென்ன? பொது சனங்கள் விகடர்களல்லர், விளையாட்டிற் காலங் கழிப்பவர்கள் அல்லர். வேலை செய்து வாழ்க்கை நடத்துகின்றவர்கள். விடாது முயன்று வியர்வை சிந்த உழைத்து அரசாங்கத்துக்குப் பலவேறுவகையில் வரிகொடுக்கின்றார்கள். எதற்காக வரி இறுக்கின்றார்கள்? தங்களுக்கு வேண்டிய வசதிகளை அரசாங்கம் அமைக்க வேண்டுமென்றே. பொதுசன வாழ்க்கையின் பொறுப்பு அரசாங்கத்தில் எவ்வாறு தங்கி யிருக்கின்றதென்று இதனல் அறியக் கிடக்கின்றது.

பொதுசன வசதிகளுட் போக்குவரத்து மிக முக்கியமானது. குறைந்த செலவிற் கூடிய விரைவில் ஒரூரிலிருந் தின்னே ரூருக்குச் சென்றுதிரும்பிவரக்கூடிய போக்குவரத்து வசதிகளை இக்காலத்தில் அமைக்க முடியாதென்றால் அது அரசாங்கத்தின் நிர்வாகச் சீர்கேட்டையல்லவா காட்டும்.

கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் ஓடும் புகையிரத நிலைமையை எடுத்துப் பார்த்தால் மிகமிக விநோதமாக இருக்கின்றது. நேர அட்டவணை ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனல் அது ஒரு நல்லெண்ணத்துக்குச் சான்றாக எழுத்தளவில் நிற்கப் புகையிரதப்பகுதியார் விதிவசம் நடந்து கொள்கின்றனர். ஒரு வாரத்தில் ஒரு நாள் நேரத்துக்குக் கொழும்பு காங்கேசன்துறைப் புகையிரதம் வந்து சேர்ந்துவிட்டால் அது பெரும் அதிசயமான காரியம் என்றே கருதப்படவேண்டும். இந் நேரஅட்டவணையைத் தயாரித்தவர் தனது விருப்பம் அவ்வாறெனஎண்ணி இயற்றினரா அல்லது அவரொன்று நினைக்க அலுவலாளர்கள் பிறிதொன்று நினைத்தார்களா?

புகைரதப் போக்கு வரத்திலே தங்கியிருக்கின்ற பலவேறு கருமங்களுக்கும் பாதகமாக நேரந்தவறுதலை அரசாங்கத்தார் அவதானிக்கா திருக்கின்றமையை நோக்குமிடத்துப் பொது சனங்கள், நடப்பதைக் கண்டுகொள்ள வேண்டியவர்கள் என்ற எண்ணம் அரசாங்கத்தார் கொண் டிருக்கின்றார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கின்றது. தலைநகருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் தபாற்போக்குவரத்துப் புகையிரதப் போக்குவரத்துட னிணைக்கப்பட்டிருக்கின்ற ஒருகாரணத்தாலே நேரம் தவறுதலினலுண்டாகும் வசதியீனம் இம்மாத்திரமன்று. இருபதாம் நூற்றூண்டின் ஈற்றிலுமா இருபத்தைந்து காதவழி செல்ல முப்பது நாளிகைக்கு மேல் நேரம் போகின்றது? ஆம் அப்படிஎன்றால், இலங்கை வேண்டிய துறைகளில் முன்னேறு திருக்கின்றதென்றே சொல்லவேண்டும்! இந்நிலைமையைப்புகையிரதப் பகுதியினர் உற்று நோக்குவார்களா?

## அன்னை கிருஷ்ணபாய்

——

அன்னை கிருஷ்ணபாயின் திருவவதாரதினம் 18-9-52 வியாழக்கிழமை யன்று வண்ணார்பண்ணை கலஹூசி வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் சைவபரிபாலனசபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் மாலை 6 மணிக்கு கொண்டாடப் பெறுமென அறியவருகின்றது.

## பண்டித மணிக்குப் பொற்கிழிப் பரிசில்

——

'உலகியல்விளக்கம்' முதலிய பல நூல்கள் இயற்றிய பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்களுக்கு தபால்செய்திப்பகுதி அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில், யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் 22-9-52 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கலாநிதி வித்துவான் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளைஅவர்களால் ஒரு பொற்கிழிப் பரிசில் வழங்கப்படுமெனப் பாரதி பொற்கிழி நிதிசேகரிப்புச் சபையினர் அறிவிக்கின்றார்கள்.

——

## பாராளுமன்றப் பேருரிமை பாதிக்கப்பட்டதா?

### எதிர்க்கட்சியினர் ஆராய்ச்சி

பிரதமர் பதவி வேட்டையெனப் பொருள் தந்த பத்திரம் உண்டாக்கிய பரபரப்பு அளவிறந்தது. அது அடங்கிவிட்டதென யாவருங் கருதினர். ஆனல், எதிர்க்கட்சியார் அதன் அத்தியாவசியத்தைக் கண்டு ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து திருத்தியடைந்த பின்பே அமைவதாகக் கூறுகின்றனர்.

குறித்த பத்திரத்தில் துரோகிகள் என்றும் பாம்பு, பேய், பேன், ஆகியவற்றைக் கொப்பாயும் அவற்றினுமிழிவாயும் மந்திரிகள் உள்ளிட்ட பாராளுமன்ற அங்கத்தவர்கள் விபரிக்கப்பட்டார்களாகையினாலே, பாராளுமன்றத்தின் பேருரிமை பாதிக்கப்பட்டதா அல்லவா என்று ஆராய்தல் வேண்டுமென்கின்றனர் குறித்த எதிர்க்கட்சியினர். எதிர்க்கட்சியினருள் ஒற்றுமை ஏற்படுமாயின் பாராளுமன்றத்தில் ஒரு கேள்விக்கு இது ஏதுவாகக்கூடுமாம்.

## தமிழ்ப் பல்கலைக் கழகம்

——

தமிழ்ப்பல்கலைக் கழகம் சிங்களப் பல்கலைக் கழகம் எனப் புறம்பாக இரு பல்கலைக் கழகங்களமைப்பது விரும்பத்தக்கதாவென ஆலோசிக்குமாறு வடடுக்கோட்டைப் பிரதிநிதி திரு. V. வீரசிங்கம அவர்கள் ஒரு பிரேரணையைப் பிரதிநிதிகள் சபையிற் கொண்டு வருவாரென அறிய வருகின்றது.

இவ்வாறு புறம்பாயமைத்தல் விரும்பத்தக்கதெனப் பேராசிரியர் ஸ்ரீ ஐவர்ஜெஞ்னிங்ஸ் அவர்கள் முனமனொரு முறை கூறியிருக்கின்றாரென்பது இங்கே குறிப்பிடத் தகத்து.

## இலங்கை இந்தியர் சத்தியாக்கிரகம்

——

இலங்கை இந்தியர் சத்தியாக்கிரகம் 15-9-52 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி தொடக்கம் 2 மாசங்களுக்குப் பின் போடுமாறு இலங்கை இந்திய தேசிய மகாநாட்டார் தீர்மானித்திருக்கின்றனர்.

## அணிந்துரை அரங்கம்

### காசியாத்திரை விளக்கம்

இது, காசியாத்திரை செய்யும் அன்பர்கட்குப் பெரிதும் பயன்படும்வண்ணம் சிதம்பரம் மௌனசுவாமி மடத்து ஸ்ரீமத் சபாபதிச் சுவாமிகளால், யாவரும் விளங்கிக்கொள்ளத் தக்க இலகுவான தமிழ் வசன நடையில் எழுதப் பெற்றுள்ளது. வடநாட்டு யாத்திரை செய்யாதவர்களும் இந்நூலை வாங்கி ஒரு முறை படித்தால் பம்பாய், டில்லி, கல்கத்தா முதலிய பட்டினங்களின விசேடங்கள், சுற்றுடல்களி லுள்ள மூர்த்தி, தலம், தீர்த்தங்களின் மகிமை, செல்லும் மார்க்கம், தூரம், புகைரதக் கிரயம், தங்குமிடம், அவ்விடங்களி லுள்ள பாஷைகள முதலியனவும், திருக்கேதாரம, பதரிநாராயணம், திருக்கைலாசம் முதலிய தலங்கட்குச் செல்லுதற்கு வேண்டிய விபரங்களும் அறிந்துகொள்ளலாம். விலைரூபா 1.

கிடைக்குமிடம்: குமார செந்தமிழ்நூற் பதிப்புக்கழகம
40 சபாநாயகர் தெரு
சிதம்பரம்.

## தமிழ் மொழியில் தந்தி

——

தமிழ் சிங்கள மொழிகளில் தந்திப் போக்குவரத்து ஒழுங்குசெய்வதற்குப் போதிய உத்தியோகஸ்தர் இல்லாமையால் அது பின்போடப்பட் டிருந்தது. அப்படிப் பின்போடாது அணிமையில் நடைமுறையிற் கொண்டு வர வேண்டுமென்று தபால் தந்திப் பகுதி மந்திரி திரு. நடேசன் அவர்கள தமது விருப்பத்தைத் தெரிவித்திருக்கின்றாராம்.

## சர்வகலாசாலைவித்தியாவிருத்திப் பண உதவி

——

(தமிழ்)

தமிழ்ப்பகுதியிற் திறமையடைந்ததற்காய் திரு A. சதாசிவம் குறித்த உதவிக்குருகாரயினர்.

(சமஸ்கிருதம்)

சமஸ்கிருதப்பகுதியிற் திறமையடைந்ததற்காக ஸ்ரீமதி. C சிவஞானசுந்தரம் ஹேவாவிதாரண் உதவிக்குருகாரயினர். சமஸ்கிருதம் இரண்டாம பகுதியில் திறமையடைந்ததற்காய்ப் பின்னர் உதவிப்பணம் பெறவிருப்போருள் ஒருவருமாயினர்.

(கணிதம்)

கணிதப்பகுதியிற் திறமையடைந்து உதவிப்பணம் பின்னர் பெறவிருப்போருள் ஒருவராக திரு S. [illegible] தன் இடம்பெற்றிருக்கின்றார்.

## உயிர்தப்பிய பசுக் கன்று

மாத்தறைப் பொலீஸ் நிலையத்துக் கெதிரே யுள்ள ஒரு அரசமரத்தின் கீழ் ஒரு பசுக்கன்று நின்று அலறி அங்குள்ள பொலிசாருடைய மனங்களைத் தனபால ஈர்த்து விட்டதாம். விஷயத்தை ஆராய்ந்தபொழுது இறைச்சிக்காரனிடமிருந்து அக் கன்று தப்பி ஓடிவந்து நின்றழுததென அறியவந்தது.

அன்றுமாலை அந்த அரசமரத்தின கீழ் உயிர்க்கொலையைப்பற்றி ஸ்ரீ மஞ்சு சித்தர்ம பாலதேரோ ஓர் அறிவுரையை நிகழ்த்தினர். அம்மா என அலற ஆருயிரைக் கொன்றருந்து இமமானிடருக்கென் சொல்வதோ?

## தென்மராட்சிவாசிகள் இயந்திரவண்டிப்பிரயாணம்

——

செவ்வாய்க்கிழமை 23-9-52 மாலை 5-30 மணியளவில சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி மண்டபத்தில் இயந்திர வண்டிப் (பஸ்) பிரயாணிகளுக்கு உண்டாகும் வசதியீனங்களை நீக்கி வசதிகளுண்டாக்குவதற்கு ஒரு சங்கம நிறுவும்பொருட்டு ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். அனுதாபிகள்யாவரும் சமூகமளிக்குமாறு திருவாளர்கள்: A. S. கனகரத்தினம, K.S. சரவணமுத்து V. விநாயகமூர்த்தி, S. நல்[illegible] C முருகாநந்தனைப் ஆகியோர் ஆரமபசெயலாளர்களாய் அழைக்கின்றனர்.

## உடுவில் இசை விழா

——

உடுவில் சனமூக நிலையத்தில் இசைத்தமிழ் நிலயத்தார் நடத்திய இசைவிழாவை (13-9-52) சனிக்கிழமை தபால் தந்திப் பகுதி மந்திரி திரு. நடேசன் அவர்கள் திறந்து வைக்கும் பொழுது முன்னொரு காலத்திலே இலங்கை இசை வல்லுநர் ஒருவருக்கு ஒப்பாவார் ஒருவரை இந்தியாவிற் காணமுடியாதிருந்ததென்றும் அத்தகைய உயர்ந்த நிலையை படைந் திருந்த பண்டையோரின் வழித்தோன்றல்கள் பண்டைப் பெருமைக்குத் தக்கவாறு இசைத்துறையில் உழைக்க வேண்டுமென்றும், இசை வல்லுநருக்குத் தகுந்த உற்சாக மூட்டவேண்டு மென்றும் மதிமொழி கூறினர்.

ஆண்டு விழாக்கள் தமக்கு இன்பம் பயப்பனவென்பதைத் தெரிவித்து இத்தகைய சிறு தொடக்கங்களே இந்தியாவில் மாபெரும் விழாக்களாய் வளர்ந்திருக்கின்றனவாகலின் ஈண்டும அத்தகைய வளர்ச்சியை உளதாகச் செய்தல் சாத்தியமாகுமென்று உறுதிமொழி கூறினர்.

## செய்தித் திரட்டு

=0=

இந்தியதேசிய மகாநாட்டின் தலைவராக அடுத்த இரு ஆண்டுகளுக்கும் பண்டிதநேரு அவர்களையே தொடர்ந்து தொண்டாற்றுமாறு கேட்டுக்கொள்வதாக இந்திய தேசிய மகாநாட்டு முன்னணித்தொண்டர்கள் தீர்மானித்திருக்கின்றனராம்.

x x x

ஐக்கியதேசிய மகாநாட்டு அங்கத்துவம் இலங்கைக்குத் திரும்பவும் மறுக்கப்பட்டிருக்கின்றது.

x x x

ஜப்பானியமொழி பயிற்றும் பாடசாலைகள் ஜப்பானிய அரசாங்க செலவில் இந்தியாவிலே திறப்பதற்கு ஜப்பானிய அரசாங்கம் பணம ஒதுக்கியிருக்கிறதாம்.

x x x

உடுமலைப்பேட்டை என்னுமிடத்தில் சக்கரையா என்னும் ஒருவன் தன மனைவியைக் கொன்று குடலை யெடுத்துத் தன் கழுத்தில் மாலையாகப் போட்டானும்; இது மானிடப் பிறவிதானு?

x x x

வடமத்திய மாகாணத்தில் கிரிதலை என்னுமிடத்தில் விவசாயிகள கரும்பு செய்வதற்கு 4500 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கின்றதெனவும 1500 ஏக்கர் நிலத்தில் அரசாங்கமே கரும்பு செய்யுமெனவும் அறிய வருகின்றது.

x x x

ரூபா 35,400 பெறுமதியான மாதகமொன்று இரத்தினபுரி சிவனொளிபாத ஆலய அதிகாரிகளுடைய நிலமொன்றில் கண்டெடுத்திருக்கின்றனர்.

x x x

இலங்கைச் சீனி உற்பத்தி ஜாவாவுடைய உற்பத்திக்கு நிகரானதாய் வரக்கூடிய வசதிகள இலங்கையில் அமைந்திருக்கின்றன என இந்திய கரும்பு உற்பத்தி நிபுணர் திரு. S.V. பார்த்தசாரதி அவர்கள் கூறியிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலபந்தமும் அதன் நீக்கமும்

( முதலாம்பக்கத் தொடர்ச்சி )

விடுதலைபெறும் நிலைமையையும் சித்திரித்துக் காட்டுகிறது;

**விடுதலை வழி**

சத்தாகிய சிவத்தின்கண் தோய்ந்து, சிவமாய் நின்று சிவபோகத்தை அறிந்து நுகரக்கூடிய ஆற்றல் ஆன்மாவுக்குண்டு. அதேபோல் அச்சத்தாகிய உலகியலில் தோய்ந்து உலகப் பொருளாய் இயைந்து உலகியல் இன்பத்தை நுகரக் கூடிய ஆற்றலும் ஆன்மாவுக்குண்டு, சத்தோடியைந்து சத்தாகிய சிவத்தையும் அசத்தோடு கூடி அசத்தாய் நின்று அசத்தையும் அறியும் தன்மை உடையதாக விருப்பதால் ஆன்மாவுக்குச் சதசத்து என்றொரு பெயருமுண்டு ஆன்மா பின் கூறிய நிலையில் கட்டுண்டும், முன்கூறிய நிலையில் விடுதலையும் பெற்றுளது. ஆன்மா சத்தாகிய சிவமுமன்று; அசத்தாகிய உலகியற் பொருளுமன்று; ஆனால், ஆன்மாவுக்கு விலக்கத்தக்கதாகிய பகைப்பொருள் உலகியலின்பமாகிய பாசம். கொள்ளற்பாலதாகிய நட்புப்பொருள் சத்தாகிய சிவம். இந்நெறியிற்றான் ஆன்மா நிற்கவேண்டும். ஆனால் நடைமுதலில் சாதாரணமாய் ஆன்மா இந்நெறியில் நில்லாது.

**ஐம்புல வேடர்**

அரசிளங் குமரன் ஒருவன் வேடர் கூட்டத்தில் வளர்ந்து வந்தான். தன்னை ஒரு அரசன் மகன் என்பதை மறந்து வேடர் வசமே நின்று, தன்னை ஒரு வேடனாகவே எண்ணிவிட்டான். அவன் வளர்ச்சியைப் பார்த்துக்கொண்டே வந்த வேந்தன், அவன் சொன்னால் கேட்டுத் தெளிந்து அச்சொல் வழி நிற்கக்கூடிய நிலைவருவது கண்டான். தானும் ஒரு வேடனுருவிற் சென்று அவனை நோக்கி, "நீ வேடன் அல்லை: வேந்தன் மகன்" என்று விளக்க, அரசன் மகனும் வேந்தன் பண்புகொண்டு மாறினான். அதுபோல, ஆன்மா ஐம்பொறிகளோடு கூடியிருந்து, தன்னை அவ்வைம் பொறியாகவே எண்ணிச் சிவபரம் பொருளொடு பிரிவற விருக்குந் தன்னியல்பை யறியாதவனாய், பின்னர், மலபரிபாகமும், இருவினையொப்பும் எய்தி, ஞானசாரியனாய் வந்த சிவபிரானால் சிவதீக்கை பெற்று, 'நானே நீ என்னும் அந்நிய மில்லாத் தனைமையினை உபதேசித் துணரத் தப்பெற்று தன்னைத் தம்வயப் படுத்திய ஐம்பொறிகளை விட்டு அம்முதல்வன் திருவடிகளையடையும். ஆன்மாவை அரசிளங் குமரனாகவும், முதல்வனை, அரசனாகவும், ஆன்மாவின் அறிவுப்பெருஞ் செல்வ முழுவதையும் வழிபறித்துக் கொண்டு, இத்தொழிலில் ஈடுபடுத்திச் சிறுமையுறச் செய்யும் பண்புபற்றி ஐம்பொறிகளை வேடர்களாகவும் உருவகஞ் செய்தார்.

**மலபரிபாக காலம்**

ஆகாயத்திற் பறக்குங் காற்றாடிகளெல்லாம் விடுதலை பெறவில்லை. ஏதோ ஒரு சில காற்றாடிகள் தான் அறுபட்டு விடுதலை அடைகின்றன. அதுபோல் தவப்பயன் நேரும் போதுதான், மலபரிபாகம் எய்த, முதல்வன் தோன்றாத் துணையாய், உயிர்க்குயிராய், சோதிக்குட் சோதியாய், ஞானசாரியனாய் விளங்கி, அருள்சுரந்து ஆன்மாவுக்குப் பதிஞானம் உதிக்கச் செய்து 'அந்நியமின்மையின் அரன் கழல்' செலச் செய்வான். அத்தவப்பயன் (வினைப் பயன்) நேராதவரை, சூரியனைக் கண்ட அந்தகர்போல், ஆன்மா நிலைதடுமாறி நிற்கும். குருடு பெற்ற கண், அறத்து பக்குவம்பண்ணும் நிலைமையை அடைந்தால்தான் கண்வைத்தியன் சிகிச்சை செய்ய ஆரம்பிப்பான். அதுபோல மலபரிபாகத்தால் மனம் பக்குவமடையும்போதுதான் முதல்வன ஞானசாரியனாய் விளங்கி, அவன் திருவடிப் பேறடையச் செய்வான். தாமரை மொட்டுக்கூடப் பக்குவப் பருவத்திற்றான் பரிதிகண்டலரும்.

சிலர் காலை 9 மணிக்குச் சோறு உண்கிறார்கள்; சிலர் நடுப்பகலில் உண்கிறார்கள்; மற்றுஞ் சிலர் மாலை நேரத்தில் அருந்துகிறார்கள். ஆனால் எல்லாரும் ஒருநாளில் எப்போதாவதொரு சமயத்தில் உணவருந்தியே தீருகிறார்கள் அதுபோல, ஆன்மா தனக்கு அந்நியமில்லாத சத்தாகிய சிவத்தை, எப்போதாகிலும் அடைந்தே தீரும். சதசத்தாகிய ஆன்மா தனக்கு அந்நியமாந் தன்மையுடைய அசத்தின் தொடர்பை (பாசம்) விட்டதும், அந்நிய மில்லாத் தன்மைவாய்ந்த சத்தாகிய சிவத்தையே சென்று சாரும். சத்தோடும் அசத்தோடும் தொடர்பு கொள்ளும் இயல்பினால் தான் 'சத்து', 'அசத்து' என்ற இரண்டிலொன்றைச் சார்ந்து நிற்பது ஆன்மாவுக்கு இயல்பேயன்றி, தனித்து நிற்கும் இயல்பு கிடையாது. ஊசலாடும் ஒருவன், அதன் கயிறு அறுமாயின், அவன் தரையையே சாருவான். அதுபோல, ஆன்மா அசத்தின் தொடர்ப்பு விட்டால், சத்தாகிய சிவத்தையே சென்று சாரும். சில ஆன்மாக்கள் சடுதியிலும், சில ஆன்மாக்கள் தாமதித்தும் அந்நிலையைப் பெறும். அது எவ்வாறெனில், பலதரத் திடம்வாய்ந்த கயிறுகளால் கட்டப்பட்ட ஊசல்கள போன்று.

ஆன்மாவுக்கு விலக்கத்தக்கதாகிய பகைப்பொருள் பாசம். கொள்ளற்பாலதாகிய நட்புப்பொருள் சிவம். இச்சிவபோகத்தையடைய, சீவபோகத்தைக் குறைக்கவேண்டும். அன்பே சிவம் என்பதை உண்மையில் கடைப்பிடித்து எவ்வுயிர்க்கும் அன்பு காட்டவேண்டும். பிரபஞ்சத்தை அசத்தென்று கண்டு கழிக்கவேண்டும். ஐம்புலனுக்கு வேறாக ஆன்மா தன்னைக் காணவேண்டும். "பாசத்திலே பற்றற்றால் அரன் வெளிப்படுவான்". திருவைந்தெழுத்து உள்ளக் கனிவுடன் உச்சரித்தல், இறைபணியில் நிற்றல் வேண்டும் இவைபோன்ற சாதனங்கள் கட்டுண்ட ஆன்மா விடுதலையடையத் துணைக்கருவிகள்.

விளக்கு, பொருளைக் காட்டுகிறது. அப்படியிருந்தும் விளக்கையே பார்த்துக்கொண்டிருப்பவனுக்கு, அப்பொருள்கள் புலப்படா. அதுபோல் இறைபணியில் நிற்கும் உயிர் சிவனையே பார்த்துக்கொண்டிருக்கும். அதற்கு மாயப் பிரபஞ்சம் புலப்படாது. அது புலன்களிற் சிக்குவதில்லை: விருப்பு வெறுப்புகளிற் படுவதில்லை; பாசக் கயிற்றின் சுழலிற் கட்டுப்படுவதில்லை. அப்படிப்பட்ட உயிருக்கும் உடலுக்குமுள்ள தொந்தம் புளியம் பழத்துக்கும் அதன் ஓட்டுக்குமுள்ள தொந்தம் போன்றது. அதாவது அவ்வுயிர் உடம்பிற் குடியிருந்தும, அதனைவிட்டுக் கழன்று நிற்கின்றது. தூணைப்பிடித்துக்கொண்டு சுற்றுபவனின் நிலைமைபோலும், பாத்திர விளிம்பில் திடமாய் உட்கார்ந்துகொண்டு, பாகில் விழுந்துமாயாது, அப்பாத்திரத்திலுள்ள வெல்லப் பாகை உண்ணும் ஈயைப் போலவும், சிவத்தைத் தியானித்திருக்கும் ஆன்மா கட்டுப்படுத்தும் பாசவலையில் சிக்காது, விடுதலை பெற்றுப் பெருவாழ்வு விளங்கும்.

—ஞானசம்பந்தம்.

# நேயர்கள் நெஞ்சம்

**ஆசிரிய அன்ப!**

## யாழ்ப்பாண வாசிகள்

யாழ்ப்பாணம்என்ற சொல் எப்படி வந்தது. யாழ்ப்பாண வாசிகளின் அடி எங்கு இருந்து வந்தது எனபவற்றைத் தங்கள் பத்திரிகையில் வெளியிட்டால் மிக நன்றென நினைக்கிறோம். தயவுகூர்ந்து இவற்றை சிறிது விளக்கும்படி கேட்டுக் கொளகிறோம்.

சி. மணிவாசகம்

யொகூர், 20-8-52.

[யாழ்ப்பாணம் என்பது இந்திய யாழ்ப்பாடிக்குப் பரிசிலாகக் கொடுபட்டபடியால், காரணப் பெயராய் அமைந்தது என்றும் யாழ்ப்பாண வாசிகள், குறித்த யாழ்ப்பாடி இந்தியாவிலிருந்து கொண்டு வந்து குடியேற்றினவர்களின் வழித்தோன்றல்கள் என்றும ஒரு கொள்கை பலருடைய உள்ளங்களிற் பதிந்திருக்கின்றது. இதற்காதாரமாய்ச் சில ஆராய்ச்சியாளர் கூற்றுக்களும் உள. ஆனால ஆராய்ச்சியாளருள்ளேயே அபிப்பிராய பேதமுண்டு.

"வண. ஞானப்பிரகாசசுவாமியவர்களும், இடப்பெயர் வரலாறு ஆசிரியராகிய S. W. குமாரசுவாமியவர்களும் யாழ்ப்பாடியின் கதை புனைந்துரையே யெனவும், இதுபோன்ற கதைகள் வையாபாடலிலும் தக்ஷிண கைலாய புராணத்திலும் மலிந்து கிடக்கின்றன வெனக் கூறியதோடு, அந்தக் கவிவீரராகவன் உண்மைச் சரிதையை யாழ்ப்பாடி தலையில் வைபவமாலைக்காரர் கட்டி வைத்தனரெனவும், அப்படியொருவன் இருக்கவுமில்லை யாழ்ப்பாணம் பரிசிலாக ஒருவற்குக் கொடுபடவுமில்லையெனவும், சிங்களர் நல்லூருக்கு வைத்த 'யாப்பநே' 'யாப்பா பட்டுநே' யென்னும் பெயரே பிற்காலத்தில் யாழ்ப்பாணமென மருவியதெனவும், யாழ்ப்பாணன்கதையை எமது புலவர் உருவகப்படுத்தி வைத்தார்களெனவுங் கூறுவர்." (யாழ்ப்பாணச் சரித்திரம் பக்கம் 2:3) என்பது ஆராய்ச்சியாளர் அபிப்பிராயபேதத்தை விளக்கும்.

பாரத்த ஆராய்ச்சியாளராய்த் தோன்றுகின்ற திரு. செ. இராசநாயகமுதலியாரவர்கள் தமது யாழ்ப்பாணச்சரித்திரத்திலே "தமிழரசரும் பலமுறைகளில் அநுராதபுரத்தைவெற்றிகொண்டு அரசாண்டு வந்தார்கள். அதனால், தமிழ்க்குடிகளுமிலங்கையிற் குடியேறின. நாகரும், இயக்கரும், கலிங்கரும் தமிழரும் கலந்தே சிங்களர் ஆயினார்கள்" (பக்கம் 15)

"உக்கிரசிங்கன் இறந்தவுடன் இளவரசனாகிய மகன் ஜெயதுங்க பரராசசிங்கன் என்னும் நாமத்துடன் அரசாண்டான்.

அவன் அரசியற்றுநாளிலே யாழ்ப்பாடி என்னும் பாணகுலத்தொருவன், பரிசில் பெறுவான் வேண்டி அரசனவைக் களம்புக்கு, யாழ் வாசித்து அதன்மாட்டுத் தனக்குள்ள பேராற்றலைக்காட்டினான். அரசனும் அவ்வியாழினின்றும் எழுந்த கீதவினபத்திலீடுபட்டுத தன்தேசத்துத் தென்கோடியிலிருந்ததும், இப்போது கரையூர் பாசையூரெனறழைக்கப்படுவதுமாகிய மணல் மேட்டைப் பரிசிலாகக் கொடுத்தான். யாழ்ப்பாடியு முவகை கொண்டேற்றுத், தன்னூர் சென்று தன் குலத்தார்களாகிய சில பாணர்களைக் கொணர்ந்து மேட்டைத் திருத்திக் குடியேற்றினான். அவனும் அவன் குலத்தாரும் குடியேறிய இடம் யாழ்ப்பாணம் என்றழைக்கப்பட்டது. பாணரிய சில பிரிவினர் மீன் பிடிக்குந் தொழி லுடையவர்களானபடியால், ஆங்குக் குடியேறியவர்களும் அத்தொழிலையேசெய்து வந்தார்கள். நெய்தல நிலமாக்கள வசித்தபடியால் இக்கிராமங்களுக்கு யாழ்ப்பாணப் பட்டினம் எனனும் பெயர் இடப்பட்டது. அவ்விடம், பின்னாளில பிறதேசப் பிரயாணிகளின கப்பல்கள் கட்டுந் துறையாகி, யாழ்ப்பாணத் துறை, யாழ்ப்பாணப் பட்டினத் துறை, பட்டினத்துறை என்ற பெயர்களா லழைக்கப்பட்டு, அப்பெயர் பின் பறங்கிக்காரர் கட்டிய நகரிக்காகி, ஈற்றிற் குடாநாடு முழுவதற்கு முரித்தாய்விட்டது." (பக்கம 29-30) என்று கூறுபவறாறும் பிறவாறும்தென இந்தியதமிழரசர்கள் இலங்கை அரசர்களுடன் போர்செய்து வெற்றிபெற்ற காலங்களில் இந்திய தமிழ் மக்கள் இலங்கையின பலவிடங்களிற்குடியேறினர்களென்றும, யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியெனினும் (கரையூர் பாசையூர்) யாழ்ப்பாடிக்குப் பரிசிலாக வழங்கப்பெற்றதென்றும் அப் பகுதியினையேயெனினும் யாழ்ப்பாடி தன்னுடன் கொண்டுவந்து குடியேற்றினானென்றும கொள்ளுதற்கிடமுண்டு. எனவே, யாழ்ப்பாணம் என்ற சொல் யாழ்ப்பாடியின் வரவால் உண்டானது. யாழ்ப்பாண வாசிகளின் முன்னோர் இந்தியாவிலிருந்து வந்தனர், என்பவை தெளிபொருளாகின்றன.

இந்நாட்டு ஆதிமக்கள் இயக்கரும நாகருமே என்பதும் அவர்களுக்கு அடுத்தாற்போல் தமிழ்மக்களே இந்நாட்டவராயினரென்பதும் இங்கே கவனிக்கற்பாலது. ப—ர்]

### திருக்கேதீச்சர ஆலயத்தில் நவராத்திரி பூசை

இவ்வாலயத்திலே வருகிறவெள்ளிக்கிழமை முதல் ஒன்பது நாட்களிலும் விசேட அபிடேக ஆராதனைகளும், 10-ந் தினமாகிய விஜயதசமியன்று பிற்பகல்விசேஷ பூசையும் உற்சவமும் நடைபெறுமென அறியவருகிறது.

### இந்து ஆலயச் சட்டம்

இந்து ஆலயச் சட்டதிட்டத்தில் அரசாங்க மேற்சபையார் நியமித்த உபசபையார் பல திருத்தங்களைச் செய்து குறித்த திட்டம் மந்திரி சபையார் தொடக்கத்தில் வெளியிட்ட திட்டத்திலிருந்து பல துறைகளில் வித்தியாசப்படுதலால், அது பிரதிநிதிகள் சபையின் ஆலோசனைக்குப் போவதற்குமுன் மந்திரி சபையாரால் ஆராயப்படுமென அறிய வருகின்றது.

### தேவை

அராலி சரஸ்வதி வித்தியாசாலையில் சேரவும், விசேட கைவேலையுங் கற்பிக்கும் தகைமை வாய்ந்த இரு ஆசிரியைகள் தேவை. இசையறிவுடையார்க்கு விசேட மதிப்பு உண்டு. மானேசர் சரஸ்வதி வித்தியாசாலை; அராலி; என்ற முகவரியில் 15-10-52 க்கு முன் மனுச்செய்க.

மு. சதாசிவம்
காரியதரிசி

அராலி,
சரஸ்வதி வித்தியாசாலை.
M. 119 16—9—52.

### எது சரி?

"ஆகம பண்டிதர்களே?"

ஆடித்திருவோணத்தில் மாணிக்கக் கங்கைத் தீர்த்த தினத் திருவிழாக் கொண்டுள்ள கதிர்காமக் கந்தவேள் உற்சவத்துள் தீர்த்த தினமே உற்சவப் பிரதானம உடைத்தென்பதில் ஐயம் ஏதுவேனும் உண்டோ? இன்றேல் 1951 கர வருஷம் ஆடி மாதம் 4-ந் தேதியிலும், 31-ந் தேதியிலும் இரண்டு திருவோண தினங்கள் வந்த காலத்தில் சில பஞ்சாங்கக் கணிதர் 4-ந் தேதியையே தீர்த்த தினமாகக் குறித்திருந்ததற்கு ஆகம மேற்கோள் ஏதுவேனும் உண்டா? எங்ஙனமாயினும் கழிந்தன கழிக. வரவிருக்கும் விஜய வருஷத்தின் மேல் வரும் 1954 ஜய வருஷத்தில ஆடிமீ 2-ந் தேதியிலும் 30-ந் தேதியிலும் (இரண்டு தினங்களிலும) திருவோணம் வருகின்றது. இதனுள் எந்தத்தினத்தைத் தீர்த்த தினமாகக் கொள்ள ஆகமம் இடந்தரும்? என்பவைகளை ஆலய அனுட்டான ஆகம சாஸ்திர ஆராய்ச்சி மிக்க பெரியார் தெளிவிடும் வண்ணம் அவர்களைப் பணிவோடு வேண்டிக்கொள்கின்றேன்.

சிவசூரியநாராயணன்
பஞ்சாங்க கணிதர்
இட்ட மொழி—திருநெல்வேலி
தென்னிந்தியா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வியாவிற் சைவ வித்தியாசாலை வயிர விழா

## காரை நகரிற் சைவபரிபாலனம்

இவ்விழா நந்தனஹு ஆவணிமீ உக, உஉ, உங (5, 6, 7-9-52) சனி, ஞாயிறு, திங்களில் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. விழா ஆரம்பத்தின்போதும் நிறைவின்போதும் தேவாரபாராயணத்துடன் வாழ்த்துப் பாடல்கள் பாடப்பெற்றன.

முதல்நாள் தலைமைதாங்க இருந்த ஸேர். வை. துரைசுவாமி B. A. அவர்கள், சில வசதியீனங்களால், வரமுடியாமையால் பரமேஸ்வராக்கல்லூரிப் பேராசிரியர் திரு. மு. ஞானப்பிரகாசம் B. A, B. Sc. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது தலைமைப்பேருரையில் தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கொள்கையே, சைவ அன்பர்கள் கொள்கையென்றும், எம் சைவ சமய விருத்திக்காக சைவத் தொண்டர்படை அவசியமென்றும் அவர்கள்மூலம் பல பணிகளைப் புரியலாமென்றும் வலியுறுத்திக்கூறினர்.

பின்னர் பாடசாலை அறிக்கையை திரு. அ. தேவராசா ஆசிரியர் அவர்கள் வாசித்தார். அறிக்கையில் 1890-ம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களை முயற்சியால் ஆரம்பிக்கப்பெற்ற இப்பாடசாலை பலவிதமாக வளர்ச்சியடைந்து, இன்று அதன் வயிரவிழா நடைபெறுவதாகவும், பன்னம், தைசவு முதலான கைத்தொழில்களும் கற்பிப்பதாகவும், எதிர் வரும் விஜயதசமியன்று தமிழ் பாலபண்டித பண்டித வகுப்புக்கள் ஆரம்பிக்கப்போவதாகவும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

வித்தியாதரிசி திரு. K. சிவபாதம் அவர்கள் "அரசாங்கமும் சுதேச பாடசாலைகளும்" என்னும் விஷயமாகச் சொற்பொழிவாற்றும்பொழுது, இப்பாடசாலை இவ்வாறு ஓங்கிவளர இப்பாடசாலை அதிபர் திரு. இ. நாகலிங்கம் காரணகர்த்தாவாகவுள்ளவரென்றும் அவருக்கு, இக்கிராமம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டதென்றும் குறிப்பிட்டார். தாய்மொழிமூலம் கல்வியூட்டல் நடைபெற்றால், சாதி சமயம், கலாசாரம் முன்னேற்றமடையுமென்றும், பிறமொழிமூலம் கற்றவரும் அறிவைத் தாய்மொழிமூலம் குறைந்த காலத்தில் கறகமுடியுமென்றும் மகாத்மா காந்தியடிகள் கூறியதைக் குறிப்பிட்டும், சுதேச பாஷைகள் விருத்தியடைதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளையும் கூறிமுடித்தார்.

அவருக்குப் பின் பேசிய கனம், வடிவேலுச்சாமியார் அவர்கள் "சமயப்பண்பு" என்பதுபற்றிப் பேசும்பொழுது அன்பே சிவம் என்றும், அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு" அன்புடைய மதமே சிவமதம் என்றுகூறி, இதற்கு மேற்கோளகள் திருமூலர்கூறுவதிலிருந்து எடுத்துக் காட்டி தெய்வக் கொள்கையால் தான் பாரத தேசம் பல தீமைகளிலிருந்தும் காப்பாற்றப்பட்டதென்றும் பக்திப்பாடல்களைப் பாடி மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்றெல்லாம விளக்கமாக எடுத்துரைத்தார்.

வைரவிழாவின் இரண்டாந் தினவிழா வடமாகாணப்பகுதி வித்தியாதரிசி திரு. A. சரவணமுத்து அவர்கள் தலைமையிலாரம்பமானது. தலைவர் தமது உரையில் இப்பாடசாலையாம் அன்னை இக்கிராமத்துக்கு அளப்பரிய தொண்டுகள் புரிவதாகவும் யாவரும் இதற்கு நன்றி பாராட்டுவதுடன் பொருளுதவி, சரீர உதவி அளித்தல் மிக அவசியமென்றுங் கூறினர்.

பின்னர் பண்டிதை ஸ்ரீமதி ச அமிர்தாம்பிகை B.A. (Hons) சைவசமய வளர்ச்சி என்னும் விஷயத்தில் சொற்பொழிவாற்றினர். அவர் தமது பேச்சில் ஆதியும் அந்தமும் இல்லாத நம் சைவசமயத்துக்குவளர்ச்சி ஏது! குறைவு ஏது! மூவேந்தர்களும் சிவபக்தர்களானமையால் அக்காலம் சைவம் தழைத்து வளர்ந்தது. இக்காலம் ஆலயங்களில் நடைபெறும் தாசியர்நடனம், பலியிடுதல் போன்ற வழக்கங்கள் நிறுத்தப்படவேண்டும். வழிபடும் திருவுருவங்கள் கொழும்பு நூதனசாலையில் காட்சிப்பொருள்களாக இருக்கின்றனவே! இவைகளைச் சைவப்பற்றுள்ளவர்கள் கிளர்ச்சி செய்து ஆலயங்களில் வைத்துப்பூசைசெய்து வழிபட ஒழுங்கு செய்தல் வேண்டும் என்று வீரத்துடன் கூறினர்.

அவருக்குப்பின் திரு. பொ. நவரத்தினம் M. A. அவர்கள் "தாய்ப் பாஷைமூலம் கல்வி" என்னும் விஷயத்தில் உள்ள, உடல், தத்துவ உண்மைகளைப் பல மேற்கோள்களுடன் எடுத்துக்காட்டி அரிய ஆராய்ச்சிச் சொற்பொழிவாற்றினர்.

அடுத்தபடியாக திரு. ஆ. தியாகராசா M.A. M.Lit அவர்கள் "மாணவரும் சமயமும்" என்ற விஷயத்தில் சொற்பொழிவாற்றினர். அவர், சமயமென்றால் அதற்கு அடிப்படை ஒழுக்கமென்றும், பழக்க வழக்கங்களே ஒழுக்கத்திற்குக் காரணமென்றும், ஆகவே நல்ல ஒழுக்கத்தைச் சமூக வளர்ச்சியிலிருந்துதான் பெற முடியுமென்றும், சமுதாய வளர்ச்சிக்கேற்பப் பாடசாலைகளில் சமயபோதனை நடக்க முயற்சி செய்தால் நன்மை ஏற்படுமென்றும் கூறினர். ஈற்றில் தலைவரவர்கள் சமய வளர்ச்சிக்கு நாம் செய்யவேண்டிய பல கடமைகளைப் பற்றிக் குறிப்பிட்டனர்.

மூன்றாந்தின விழாவில் மாலை மூன்றுமணியளவில் வட்டுக்கோட்டைப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. V வீரசிங்கம் B. A. அவர்கள் தீபமேற்றிக் கைத்தொழிற் சிறபக்காட்சியைத் திறந்து வைத்தனர். திருவாளர்கள் பொ. நவரத்தினம் M A, A. தியாகராசா M A, M Lit., M. சுவாமிநாதன் ஆகியோர் குறிப்புரைகூறினர்.

இரவு 7 மணியளவில் கதம்பக்கச்சேரி வடமாகாணவித்தியாதிகாரி திரு. K கிருஷ்ணபிள்ளை B A அவர்கள் ஆதரவின்கீழ் நடைபெற்றது. இப்பெரியார் தமது தலைமையுரையில் இன்றைய கல்வி முறையைப்பற்றியும் அது ஒவ்வொரு துறையிலும் திறமையுடையவர்களை அவ்வத்துறையில் நிபுணராக்குவதெனவும், கைத்தொழிற் கல்வி மிக அவசியமெனறும், இப்பாடசாலை தொழிற்கல்வி முறையிற் செய்யும் சேவை மதிக்கறபாலதென்றும் குறிப்பிட்டாரகள். இரவு 11 மணியளவில் வயிரவிழாக் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

---

## அரசாங்க அறிக்கை
## கிருஷிக இலாகா

N. 2762. யாழ்ப்பாணக் கிருஷிக பாடசாலைக் கமக்காரப்பிள்ளைகளின் ஒரு வருடப் பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்பப் பத்திரங்களை 26-9-52 ற்கு முன் யாழ்ப்பாணக் கிருஷிக பாடசாலை அதிபருக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பஞ் செய்வோர் 17 வயதிற்கு மேற்பட்டவராயும் 22 வயதிற்குட்பட்டவராயும், வடமாகாணத்தவராயும், தமிழில் எழுத வாசிக்கத் தெரிந்தவராயும் இருத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தையும், வேறு உங்சட்குத் தேவையான விஷயங்களையும் ஷை பாடசாலை அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம். மேற் சொல்லப்பட்ட தாரதாமுடையோர் 30-9-52 மு. ப. 10 மணிக்கு திருநெல்வேலி கிருஷிக பாடசாலைக்குப் பிறப்புப் பத்திரங்களுடனும், நற்சாட்சிப் பத்திரங்களுடனும் வரும்படி கேட்கப்படுகின்றனர்.

G. 28 16—9—52.

---

## தேவை

அராலி ஐக்கிய பண்டசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. பிணைப் பணம் ஐந்நூறு ரூபா. ஐக்கிய பயிற்சிப் பாடசாலையிற் படித்தவர்கள், அநுபவமுடையவர்கள் விசேடமாகக் கவனிக்கப்படுவர். சம்பளம் 55 ரூபாவுக்குக் குறையாது தகுதிக்கேற்கக் கொடுக்கப்படும்.

27-9-52 க்கு முன் காரியதரிசிக்கு மனுச்செய்க.

அ. முருகேசு
காரியதரிசி

அராலி தெற்கு
10—9—52
M 115 12, 16—9—52

---


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
= 0 =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறாப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



நீங்கள் இளமைப் பருவத்தை யடைய
சி. எம். சாமி




உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதிஅற்புதசுகந்தரும.
நீரழிவு பவுத்திரம, மூலம், குன்மம, இடுப்புவலி,
வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு
முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு
தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்.
அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)

M. 16. 25-4-52—25-10-52.



திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ரூணிமார்க் ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட் | யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday, September 16, 1952.